

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (08.09.2026) மாலை சந்தித்த புதுச்சேரி தி.மு.க.வின் நிர்வாகிகள், நடைபெறவுள்ள தட்டாஞ்சாவடி தொகுதிக்கான இடைத்தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினர்.

### சர்க்காரியா கமிஷன்: வேண்டுமென்றே இல்லாத குற்றத்தைச் சுமத்தி

# அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறார் முதல்வர் விஜய்!

## சட்டமன்றத்தில் கோவி.செழியன் பேச்சு!

சென்னை, செப். 10 -

சர்க்காரியா கமிஷன் வழக்கில் தி.மு.க. மீது வேண்டும் என்றே இல்லாத குற்றத்தைச் சுமத்தி அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறார் முதலமைச்சர் விஜய், என்று கோ.வி. செழியன் சட்டமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.



சட்டசபையில் நேற்று முன்தினம் நடந்த விவாதத்தின் போது சட்டமன்ற கழக துணைக் கொறடா கோ.வி.செழியன் பேசியதாவது:

எங்களது சட்டமன்ற கொறடா மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இங்கே குறிப்பிட்டது என்ன வென்றால், முதலமைச்சர் பேசிய பேச்சு அவை குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதுதானே தவிர சபை நடவடிக்கைகளை முடக்க வேண்டும் என்பது தி.மு.க. நோக்கமல்ல.

பொதுவாக மக்கள் கேட்பதும் மற்றும் நாங்கள் கேட்பதும் என்னவென்றால் EDயில் அமலாக்கத்துறை சமர்ப்பித்த ஆவணத்தை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது அவையில் காட்டலாமா என்பது ஒன்று,

இரண்டாவதாக சர்க்காரியா கமிஷன் வழக்கில் இவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்படாத நிலையிலும் மீண்டும் மீண்டும் திமுகழகம் மீது குற்றம் சுமத்துவது அரசியல் ஆதாயம் தேடவா என்பது தான், மூன்றாவதாக மறைந்த போன தலைவர் முரசொலி மாறன் குறித்து இங்கு அவையில் பேச வேண்டிய அவசியம் என்ன, என்கிற இந்த மூன்று கேள்விகளை இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல்

# அவதூறுகளை அள்ளிவிடும் கொடநாடு வாட்ச்மேன் ஜோசப் விஜய்!

## திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சிறப்புரை!

திருவள்ளூர், செப். 10-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் சட்டமன்ற கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு குறித்து கேள்விகளுக்கு பதிலளிக்காமல் திசை திருப்பும் கொடாநாடு வாட்ச்மேன் ஜோசப் விஜய்க்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சிறப்புரையாற்றினார்.

திருவள்ளூரில் மேற்கு மாவட்ட கழக சார்பில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் கூட்டத்தில்நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்காமல் திசைதிருப்பும் த.வெ.க. அரசுக்கு கண்டனம்



நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் விவாதத்தில் பங்கேற்ற நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இளம் தலைவர் அவர்கள், த.வெ.க. அரசு அமைந்த குறுகிய காலத்திலேயே தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் கொலை, கொள்ளை, போதைப் பொருள் புழக்கம் உள்ளிட்ட சட்டம்-ஒழுங்கு சீர்குலைவுகளைச் சுட்டிக்காட்டியும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் நலனுக்கும் பயனளிக்கும் திட்டங்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் கிடப்பில் போட்டிருப்பதைக் கண்டித்தும், தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததைக் கேள்விக்குட்படுத்தியும் சட்டமன்றத்தில் ஆக்கப்பூர்வமாகப் பேசியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் உரிய முறையில் பதிலளிக்க வேண்டிய கோடநாடு வாட்ச்மேன் ஜோசப் விஜய் அதற்குப் பதிலாக பொதுக்கூட்ட மேடையில் பேசுவது போல் எதிர்க்கட்சித் தலைவர் மீது தனிப்பட்ட முறையில் அவதூறு பரப்பும் வகையிலும், நாகரிகமற்ற முறையிலும் பதிலளித்திருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சட்டமன்றத்தில் முன்வைக்கப்பட்ட மக்கள் பிரச்சினைகளுக்கு உரிய விளக்கமும், ஆதாரப்பூர்வமான பதிலும் அளிப்பதைத் தவிர்த்து, அரசியல் திசைதிருப்பல் நடவடிக்கைகளில் ஈடுபடும் த.வெ.க. அரசின் செயல்பாடுகளையும், அதற்கு துணைபோகும் வகையில் செயல்படும் ஜோசப் விஜய்யின் பேச்சுகளையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது என மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

### தி.மு.க. ஆட்சியில் காவல்துறையினர் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தனர்!

# பேரவையில் முதல்வர் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு!

## சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ.கருணாநிதி மறுப்பு!

சென்னை, செப். 10 -

தி.மு.க. ஆட்சியில் காவல்துறையினர் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தனர் என்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் உண்மைக்கு மாறான முதலமைச்சரின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்தும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அறிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு:-

நான் கடந்த 2016 முதல் 2026ஆம் ஆண்டு வரையில் 10 ஆண்டுகள் பல்லாவரம் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினராக பணியாற்றியுள்ளேன். கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க.வில் கழகப் பணியாற்றி வருகிறேன்.

எனது மூத்த மகன் ஆண்டோ மதிவாணன் எனது விருப்பத்திற்கு மாறாக பெசன்ட் நகரை சேர்ந்த அந்தோணி அவர்களின் இரண்டாவது மகள் மெர்லினா அன் அவர்களை காதலித்து வந்தார். அதன் பிறகு 20.01.2017 அன்று திருமணம் செய்து வைத்தேன்.

திருமணத்திற்கு பிறகு என் மகனும் மருமகளும் திருவான்மியூரில் தனியாக வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்தார்கள். அந்த வீட்டிற்கு நான் நிகழ்ச்சிக்காக இரண்டு முறை மட்டுமே சென்று வந்தேன். மற்றபடி அவர்களுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த நிலையில் அந்த வீட்டில் பணி செய்த ரேகா என்ற பணிப் பெண்ணை மெர்லினா துன்புறுத்தியதாக 16.1.2024 அன்று நான் தொலைக் காட்சியில் பார்த்து அறிந்தேன்.

அடுத்த நாள் 17.01.2024 அன்று திருவான்மியூர் காவல் நிலைய அதிகாரிகள் இருவர் பாதிக்கப்பட்ட பெண்ணை நேரில் சென்று வாக்குமூலம் பெற்று, 18.01.2024ல் முதல் தகவல் அறிக்கை எண்15/2024 பதியப்பட்டது.

இந்த உண்மையை மறைத்துவிட்டு சட்டமன்றத்தில் பேசிய முதல்வர் விஜய் அவர்கள், கடந்த 18.01.2024 அன்று சமூக வலைதளங்களிலும், ஊடகங்களிலும் வந்த பிறகு தான் 20.01.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அதிலிருந்து ஐந்து நாட்கள் கழித்து 26.01.2026 அன்று தான் கைது செய்யப்பட்டதாகவும் உண்மைக்கு மாறான தகவலை தெரிவித்திருக்கிறார்.

18.01.2024 அன்று காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். 24.01.2024 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதி அரசர் அவர்கள், மாவட்ட நீதி மன்றத்தில் 7 நாட்களுக்குள் சரணடைந்து ஜாமீன் பெற்றுக் கொள்ள உத்தரவு பிறப்பித்து இருந்தார். நீதிமன்ற உத்தரவு இருந்த பொழுதும் 25.01.2026 அன்று பள்ளிகொண்டா சுங்கச்சாவடி அருகில் காவல்துறையினர் அவர்கள் இருவரையும் கைது செய்தனர். இந்த தகவலை எல்லாம் மறைத்து உண்மைக்கு மாறான தகவலை முதல்வர் சட்டமன்றத்தில் பதிவு செய்திருக்கிறார்.

எனக்கும் மெர்லினா அன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் எந்த தொடர்பும் இல்லை. மெர்லினா அன் அவர்களும் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரன் அவர்களின் மருமகளுமான மார்சியா அன் அவர்களும் உடன்பிறந்த சகோதரிகள். அதனால் சபாநாயகர் குடும்பத்தில் மெர்லினா அன் நெருக்கமாக உள்ளார்.

லாட்டரி மார்ட்டின் அவர்களின் மனைவியும் அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினருமான லீமா ரோஸ் அவர்களின் உறவினர் என்று சொல்லி, அவருடைய உதவியாளர் போல் தற்பொழுது மெர்லினா அன் வலம் வந்து கொண்டிருக்கின்றார். இதனை அவருடைய சமூக வலை தளங்களில் மற்றவர்கள் பார்க்கும் விதத்தில் பதிவிட்டு வருகிறார்.

உண்மை நிலை இப்படி இருக்க சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் அவர்கள், இது சம்பந்தமான வழக்கு நிலுவையில் உள்ள போது என்னை தொடர்புபடுத்தி உண்மைக்கு மாறாக பேசியிருக்கிறார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் அதைத் தொடர்ந்து துரிதமாக கைது செய்ததும் எவ்வித தாமதமும் இன்றி தி.மு.க. ஆட்சியில் காவல்துறை நடவடிக்கை எடுக்கப்பட்டதும் உண்மை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### 'பொய்க் குற்றச்சாட்டு' என நிரூபிக்கப்பட்ட

# சர்க்காரியா கமிஷன் அறிக்கையை பேரவையில் வாசிக்க வெட்கமாக இல்லையா?

## முதல்வருக்கு – சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை, செப். 10 -

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-



சட்டமன்றத்தில் 07.09.2026 ம்தேதி காவல் துறை மானியத்திற்கு பதில் அளித்த முதல்வர் தமிழக மாணவர், மாணவிகளை சீரழித்து வரும் போதைப் பொருள் கலாச்சாரத்தை கட்டுப்படுத்தவும், தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் இருந்து கடத்தி விற்பனை செய்து வரும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை கட்டுப்படுத்தவும் எந்த பதிலும் சொல்லாமல் இது 100 நாட்களில் உருவானதல்ல பல ஆண்டுகளாக வேரூன்றி இருக்கிறது என்று பொறுப்பற்ற பதில் சொல்லி கஞ்சா போன்ற போதை பொருள் கடத்தலுக்கும், விற்பனைக்கும் துணை நிற்கும் செயலில் ஈடுபட்டு விட்டீர்களே CM sir ?

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகளை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுப்பதாக பதில் சொல்ல முடியாமல் 50 ஆண்டுகளுக்கு முன் பொய்க் குற்றச்சாட்டு என்று நிரூபிக்கப்பட்ட "சர்காரியா கமிஷன்" அறிக்கையை சட்டமன்றத்தில் வாசிக்க வெட்கமாக இல்லையா CMsir?

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்து வைத்த மக்கள் பிரச்சினைக்கு பதில் சொல்ல திராணியில்லாமல், தி.மு.க. மேடை பேச்சிகளை எடுத்து பதிலளிக்கும் முதல்வரே! உங்கள் அமைச்சரவை பெண் உறுப்பினர் அலைபேசி மூலம் "லட்சுமணன்" என்பவரை ஜட்டியோடு உட்கார வைத்து அடித்து கொன்று விடுவேன் என்று மிரட்டியதையும் சட்டமன்றத்தில் பேசி இருக்கலாமே CMsir?

தமிழ்நாட்டில் த.வெ.க. நிர்வாகிகளும், உறுப்பினர்களும் செய்து வருகின்ற கொலை,கொள்ளை போதை பொருள் விற்பனை பாலியல் சீண்டல் போன்ற வழக்குகள் மீது உறுதியான நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவிப்பதை விட்டுவிட்டு FIR பதிவு செய்து இருக்கிறோம் என அலட்சியமாக சொன்ன பதில் மக்களை ஏமாற்றும் செயல் இல்லையா CM sir?

நாட்டின் சட்டம் - ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க போகிறோம் என்பது பற்றி எந்த பதிலும் பேசாமல் அண்டை மாநில உதவியாளர்கள் எழுதிக் கொடுத்ததை சினிமா அங்க அசைவுகளோடு (நடித்து ) வாசித்து பொதுக்கூட்டத்தில் நான்காம் தர மேடைப் பேச்சாளரை போன்று தரம் தாழ்ந்து பேசியது சட்டமன்றத்தின் மாண்பை சந்திக்க வைத்து விட்டதே CM sir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

# முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்பது - கழக நிர்வாகச் சீரமைப்புப் பணிகளை விரைந்து நிறைவேற்ற தீர்மானம்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சிறப்புரை! அன்னியூர் சிவா, வி.ஜி.ராஜேந்திரன், ப.அப்துல் மாலிக் பங்கேற்பு!

திருவள்ளூர், செப். 10 -

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், திருவள்ளூர் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைமைக் கழகப் பிரதிநிதிகளான, கழக விவசாயத் தொழிலாளர் அணி செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அன்னியூர் சிவா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்,

கூட்டத்தில் பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில், கழகத் தலைவர் தலைமையில் வரும் செப்டம்பர் 15ஆம் தேதி நடைபெற உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், தந்தை பெரியார் பிறந்தநாள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிறந்தநாள் ஆகிய மூன்று சிறப்புமிக்க நிகழ்வுகளும் ஒருங்கிணைந்து கொண்டாடப்பட உள்ளன. இவ்விழாவில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அனைத்து நிலை நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்வது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 22.08.2026 அன்று சென்னைஅண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கழக நிர்வாகச் சீரமைப்பு தீர்மானத்தின்படி, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழகங்களின் நிர்வாக அமைப்புகளை மறுசீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அதன்படி, தலைமைக் கழகம் அறிவித்துள்ள பிரதிநிதிகளின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் கிளைக் கழகங்களின் எல்லைகளை முறைப்படுத்தி, நிர்வாகப் பகுதிகளை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

குறிப்பாக, கிளைக் கழகங்கள் அமைக்கப்படும் பகுதிகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை முறையாகக் கணக்கிட்டு, ஒவ்வொரு கிளைக் கழகத்திலும் ஏறத்தாழ சமமான எண்ணிக்கையில் வாக்காளர்கள் இடம்பெறும் வகையில் பகுதிகளைப் பிரித்து புதிய நிர்வாக அமைப்பை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், ஏற்கனவே உள்ள கிளைக் கழகங்களின் எல்லைகள், வாக்காளர் எண்ணிக்கை, குடியிருப்பு பகுதிகள் மற்றும் உள்ளாட்சி நிர்வாக எல்லைகள் உள்ளிட்டவற்றை முறையாக ஆய்வு செய்து, எவ்வித குழப்பத்தி ற்கும் இடமின்றி சீரான முறையில் நிர்வாகப் பிரிவுகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து, இச்சீரமைப்புப் பணிகளை கண்காணித்து வழிகாட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மறுசீரமைக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழகங்களின் விவரங்களை, வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் முறையாகப் பிரிக்கப் பட்ட விவரங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்டக் கழக நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மாவட்டக் கழக நிர்வாகம் அவற்றை ஆய்வு செய்து தேவையான திருத்தங்கள் மற்றும் பரிந்துரைகளுடன் தலைமைக் கழகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கழகத்தின் அடிப்படை அமைப்பான கிளைக் கழகங்களை வலிமையானதாகவும், ஒழுங்கானதாகவும் உருவாக்குவதற்கு இந்த நிர்வாகச் சீரமைப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், அனைத்து நிலை கழக நிர்வாகிகளும் தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களை முழுமையாகப் பின்பற்றி, எந்தவித பாரபட்சமுமின்றி, வாக்காளர் எண்ணிக்கைக்கு இணையான முறையில் கிளைக் கழகங்களைப் பிரித்து, நிர்வாகச் சீரமைப்புப் பணிகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சியை அமைத்திடவும், கழகத் தலைவரை மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கச் செய்திடவும், ஒவ்வொரு கழகத் தோழரும் அர்ப்பணிப்புடன் கழகப் பணியாற்ற வேண்டும் என கூட்டத்தில் உறுதியேற்கப்பட்டது. கழகத்தின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் மேலும் வலுப்படுத்தி, தலைமைக் கழகத்தின் அனைத்து அறிவுறுத்தல்களையும் முழுமையாக செயல்படுத்தி, கழகத்தின் வெற்றிப் பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு இக்கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஆர்டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர் குருதாஸ், உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, பா.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், எம்.கே. சுப்பிரமணி, ராஜேஷ்வரி ரவீந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ. ரமேஷ், க.அரிகிருஷ்ணன், டி.மோதிலால், பிரகாஷ் ஞான ஒலி, ஆர்த்தி ரவி, சி.என்.சன்முகம், பெ. பழனி, ஜி.ரவீந்திரா, என். கிருஷ்ணன், வி.வினோத் குமார், சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், மா.இரகு, பா.சம்பத், கே.ராஜேந்திரன், ஏ.எல்.விஜயகுமார், டி.ஆர்.பாபு, விஜிலு மற்றும் மாவட்டத்தின் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள், முன்னாள் மற்றும் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டார்கள்.

முடிவில் நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் திருவள்ளூரில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் தலைமைக் கழக பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, ப.அப்துல் மாலிக் சிறப்புரையாற்றினார்கள் உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், திருத்தணி எம்.பூபதி உள்பட மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், இந்நாள் – முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.